செய்தி வெளியீடு எண்:111 நாள். 17.03.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி இன்று (17.03.2015) மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் நெடுஞ்சாலைத்துறையின் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர்கள் அலுவலக கட்டடம் கட்டப்பட்டுவருவதை ஆய்வு மேற்கொண்டார். இதில் நெடுஞ்சாலைத்துறையின் முதன்மைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., மற்றும் தலைமைப் பொறியாளர்கள், உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை 8 அலகுகளைக் (Wings) கொண்டது. இவற்றில் நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி மற்றும் தரக்கட்டுப்பாடு அலகைத் தவிர மற்ற தலைமைப் பொறியாளர்கள் அலுவலகங்கள் வாடகை கட்டிடத்தில் இயங்கிவருகிறது. அரசு கட்டிடத்தில் இயங்குவதற்கு ஏற்ப கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர்கள் அலுவலக கட்டடம் மற்றும் தலைமைப் பொறியாளர்களுக்கு குடியிருப்புகள் (Residential Quarters) மொத்தம் ரூபாய் 42 கோடி மதிப்பீட்டில் 70 ஆயிரம் சதுர அடியில் கட்டப்பட்டு வருகிறது.

மேலும் புது டெல்லியிலுள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு இணையாக தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி நிலையம் விளங்கிவருகிறது. இதன் தரத்தை மேலும் உயர்த்தி நெடுஞ்சாலைத்துறையின் பொறியாளர்கள் நவீன தொழில் நுட்பத்திற்கேற்றவாறு பயிற்சி பெறுவதற்கும் மற்றும் பொறியியல் கல்லூரியின் மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்த பயிற்சி பெறுவதற்கு ஒருங்கிணைந்த அதி நவீன வசதியுடன் கூடிய பயிற்சி வளாகக் கட்டடம் ரூபாய் 14.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருவதையும் ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகள் யாவும் 6 மாத காலத்தில் முடிவடையவுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**